Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 49 of 2025

## Deposition of P.W.5 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சசிகுமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் பழனிச்சந்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சங்கீதா என்னுடை யமனைவி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி. இந்த வழக்கில் இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜ் எனது சித்தப்பா. அவருக்கு திருமணமாகாமல் தனியாக குடியிருந்து வருகிறார். நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து 50 அடி தூரத்தில் எதிரி விஜயகுமார் குடியிருந்து வந்தார். என் சித்தப்பா சேட்டு என்கிற தங்கராஜ் வீடும் விஜயகுமார் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. 2 ,3 வருடத்திற்கு முன்பு இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த போது நான் வீட்டில் தூங்கி கொண்டிருந்தேன். என் அக்கா காந்தா வீட்டிற்கு முன்புறம் சம்பவம் நடந்தது. இருட்டில் சத்தம் கேட்டது. ஓடிபோய் பார்த்தபோது என் சித்தப்பா ரோட்டில் விழுந்து கவிழ்ந்து கிடந்தார். எப்படி விழுந்தார் என்று தெரியாது. என்சித்தப்பாவை நானும், என் மனைவியும், ஜெயபாலும் சேர்ந்து ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். என் சித்தப்பாவிற்கு எந்தெந்த இடத்தில் காயம் இருந்தது என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு, என் சித்தப்பா இறந்துவிட்டார். அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் என் தம்பி விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்த அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அப்போது நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், அப்போது லட்சுமி, என் சித்தப்பா சேட்டு என்கிற தங்கராஜ், என் மனைவி சங்கீதா, அழகு ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரி சேட்டு என்ற தங்கராஜிடம் "நான் என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜின் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும் நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும் குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நாங்கள் சத்தம் போடவே விஜயகுமார் ஓடி விட்டார் என்றும், அதன்பிறகு, நாங்கள் ஜெயபால் உதவியுடன் குத்துப்பட்ட தங்கராஜை போக்குவண்டியில் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக என் சித்தப்பாவை குத்தி கொலை செய்ததது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு என் மனைவி கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்தார்கள் என்றும், பின்பு 13.05.2023ம் தேதி காலை 7 மணிக்கு ராசிபுரம் காவல் ஆய்வாளர் ராசிபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு சாட்சிகள் மமற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் என் சித்தப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட போது நானும் உடனிருந்து சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் தம்பி என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.6 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சடையன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் பழனிச்சந்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் எனது தம்பி. ஆஜர் எதிரி எனது இளைய மகன். சாட்சி சசிகுமார் என் மூத்த மகன். அ.சா.1 சங்கீதா அவரது மனைவி. என் தம்பி இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜ் திருமணமாகாமல் தனியாக குடியிருந்து வந்தார். என் தம்பி வீட்டிற்கு பக்கத்தில் நானும், என் மனைவியும் ஒருவீட்டில் தனியாகவும், எதிரி விஜயகுமார் அவரது மனைவியுடன் தனியாகவும் வாழ்ந்து வந்தோம். சுமார் 2 வருடத்திற்கு முன்பு இரவு 12 மணிக்கு சம்பவம் நடந்தது. அப்போது நான் தூங்கி கொண்டிருந்தேன். சிறுநீர் கழிக்க எழுந்து பார்த்த போது என் தம்பி சேட்டு என்கிற தங்கராஜை ஆஸ்பத்திரிக்கு தூக்கி போனார்கள். அவருக்கு நெஞ்சில் காயம் இருந்தது. அந்த காயம் எப்படி ஆனது என்று எனக்கு தெரியாது. ஆஸ்பத்திரிக்கு நானும் போனேன். ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளித்த சிறிது நேரத்தில் இறந்துவிட்டார். சம்பவம் குறித்து யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஸ்பத்திரியில் என்னை போலீசார் விசாரித்தார்கள். இறந்த அன்று விசாரித்தார்கள்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் என் மகன் விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்த அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அப்போது நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், நான் சத்தம் கேட்டு அங்கு போய் பார்த்தேன் என்றும், அப்போது லட்சுமி, என் தம்பி சேட்டு என்கிற தங்கராஜ், என் மருமகள் சங்கீதா, அழகு ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரி சேட்டு என்ற தங்கராஜிடம் "நான் என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜீன் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும் நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும் குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நாங்கள் சத்தம் போடவே விஜயகுமார் ஓடி விட்டார் என்றும், அதன்பிறகு, நாங்கள் ஜெயபால் உதவியுடன் குத்துப்பட்ட தங்கராஜை போக்குவண்டியில் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக என் தம்பியை குத்தி கொலை செய்ததது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு எனது மருமகள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்தார்கள் என்றும், பின்பு 13.05.2023ம் தேதி காலை 7 மணிக்கு ராசிபுரம் காவல் ஆய்வாளர் ராசிபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு சாட்சிகள் மமற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் என் சித்தப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட போது நானும் உடனிருந்து சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் இளைய மகன் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.